பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**வியாபார இடையூறு காப்புறுதிப் பத்திரம்**

**1. காப்பீட்டு விடயதானம்**

வியாபார இடையூறு காப்புறுதிப் பத்திரமானது, காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்களுக்கு ஏற்பட்ட பௌதீக இழப்பு, சேதங்களினால் உங்களது செயற்பாடுகளுக்கு இடையூறு அல்லது தடங்கள் ஏற்பட்டால், வருமானங்கள், நிலையான செலவினங்கள் உட்பட உங்களது வியாபார வருமானங்களை பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டதாகும்.

**2. காப்பீடு செய்யப்பட்டவை யாவை?**

மொத்த வருமான இழப்பு –காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்களுக்கு ஏற்பட்ட பௌதீக இழப்பு, சேதங்களினால் உங்களது வர்த்தக செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டால், காப்புறுதி நியதிகள், நிபந்தனைகளின் கீழ், காப்பீடு செய்யப்படும்.

செயற்பாட்டு செலவின அதிகரிப்பு –இடையூறுகளை ஆகவும் குறைப்பதற்காகவும், இயன்றளவில் சீக்கிரமாக வழமையான வர்த்த செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்காகவும் தற்காலிக வளாகங்கள் அல்லது உபகரணங்கள் போன்றவற்றுக்காக செய்யப்பட்ட அவசியமானதும் நியாயமானதுமான மேலதிக செலவினங்களுக்கும் காப்பீடு வழங்கப்படும்.

**3. காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)**

இந்தக் காப்புறுதியானது சேதமடைந்த கட்டிடங்கள், கையிருப்புக்கள், இயந்திராதிகள் அல்லது பௌதீக சொத்துக்களை திருத்துவதை அல்லது மாற்றீடு செய்வதை காப்பீடு செய்யாது. அத்தகைய இழப்புகளும் சேதங்களும் வேறான சொத்து / தீ காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட வேண்டும்.

இந்தக் காப்புறுதிப் பத்திரத்தின் கீழான கோரிக்கை, இதே ஆபத்தை காப்பீடு செய்யும் சொத்து / தீ காப்புறுதிப் பத்திரத்திமொன்று இருப்பதற்கு உட்பட்டதாகும். தொடர்பான பௌதீக இழப்புகளும் சேதங்களும், பிரயோகமாகத்தக்க நியதிகள், நிபந்தனைகளுக்குட்பட்டு வலுவான கோரிக்கையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

**5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்**

மொத்த வருமானம் மற்றும் மொத்த இலாபம் போன்ற சம்பந்தப்பட்ட விபரங்கள் உட்பட நிதியியல் விபரங்களும், வியாபாரத்தைப் பற்றியும், அத்துடன் வியாபார செயற்பாடுகளின் தன்மை பற்றியும் சரியானதும் சம்பூரணமாமதுமான தகவல்களை வழங்கப்பட வேண்டும்.

ஏதும் இடையூறுகளை ஆகவும் குறைக்கவும், நிதி இழப்பை ஈடு செய்வதற்குமான நியாயமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கோரிக்கையை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள யாரும் மதிப்பீட்டாளர்கள், இழப்பு இயைபாக்குனர்கள் அல்லது விசாரணையாளர்களுடன் முழுமையான ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்**

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

+94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

+94 11 2335167 | info@ircsl.gov.lk | www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

+94 11 2505542 / +94 11 2505041 | info@insuranceombudsman.lk |

www.insuranceombudsman.lk

**7. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –**

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**

எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை

+94 11 2428428 | info@fairfirst.lk | www.fairfirst.lk

**முக்கிய குறிப்பு** – பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்